பனைச் செல்வம்

(திங்கள் வெளியீடு)

ஆசிரியர்:
வே. வ. இராமசாமி



வெளியிடுவோர்:

சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்.

சென்னை-17.

சாபகிருது ஐப்பசி	விலை: 25 காசு

Vol. 4 No. 1 & 2
1 - NOV 1963
MADRAS

பனைச் செல்வம்

(மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன வெளியீடு)

பனை 4 சோபகிருது ௵ ஐப்பசி ௴ பாளை 1

சேவையைப் போற்றுகிறோம்

விஞ்ஞான ரீதியில் பனைத் தொழில் வளர்ச்சியடையச் செய்வதற்காக திரு. காமராஜ் எடுத்துக் கொண்ட முயற்சி எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். அதேபோல பனைவெல்லத் தொழில் வல்லுநர்கள் தரத்தையும் உயர்த்தவேண்டி பல உதவிகளையும் அவர் அளித்து வந்தார். இதற்காக முதல் அமைச்சராகப் பதவி ஆற்றுங்காலத்திலேயே பல பனைவெல்லத் திட்டங்களை நன்கு அமைத்துக் கொடுத்து அவற்றை நிறைவேற்றவும் வழிகாட்டினார். அவர் ஏழை மக்கள் நலன்மீது முழு கவனம் செலுத்தி வந்ததால், உயர்தரத்தில் உள்ளவர்களும் மேம்பாடடையச் சௌகரியமாக இருந்து வந்தது. 1961-ம் ஆண்டில் தூத்துக்குடியில் நடைபெற்ற தமிழ்நாடு பனைவெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் இரண்டாவது மகாநாட்டில் திரு. காமராஜ் ஆற்றிய அறிவுரை மிகவும் சிறப்பு வாய்ந்தது. விஞ்ஞான ரீதியில் பனைவெல்லத் தொழில் வளர்ச்சியுறுவதை அவர் வரவேற்றார். கோவையில் புதுமுறை பதநீர் விற்பனை நிலையத்தைத் தொடங்கி வைத்தார். தமது வீட்டிற்கே தருவித்து தினந்தோறும் பதநீர் பருகி, பனைத் தொழில் அபிவிருத்திக்குத் தக்க ஆதரவு அளித்து வந்தார். இன்றும் பல வகையாலும், பனைத் தொழில் விஞ்ஞான ரீதியில் வளர்ச்சியடைய வேண்டுமென்பது அவருடைய அவா.

முதல் அமைச்சர் பதவி ஏற்றுள்ள திரு. எம். பக்தவத்சலம் நமது பனைத் தொழில் வளர்ச்சிக்கு ஆரம்பம் முதலே ஆதரவளித்து வருகிறார். 1955-ம் ஆண்டில் உடங்குடியில் காதி கமிஷன் ஆதரவில் பனைவெல்ல வழி காட்டி நிலையம் திரு. பக்தவத்சலத்தால் தொடங்கி வைக்கப்பட்டு நன்கு வளர்ச்சி அடைந்தது. இப்பொழுது அந்த நிலையம் நல்ல முறையில் பூரியில் நடைபெற்று வருகின்றது. 1959-ம் ஆண்டில் மாநில சம்மேளனத்தில் அவர் நவீன முறை பதநீர் விற்பனை நிலையத்தை சென்னையில் திறந்து வைத்தார். பின்னர் 1960-ம் வருஷத்தில் குன்னத்தூரில் சென்னை மாநில பனைவெல்ல ஊழியர் மகாநாட்டைத் திறந்து வைத்து ஒரு சிறப்புறை நிகழ்த்தினார்.

பின்னர் SO_2 முறையால் பதநீர் பாதுகாக்கும் முறையைத் தொடங்கி வைத்தார். சென்னை மாநில ஊழியர் பயிற்சி நிலையத்தைக் கடலூரில் திறந்து வைத்தார். அது நன்கு இயங்கி வருகின்றது. இந்த ஆண்டு (1963) தொடக்கத்தில் நாகர்கோவிலில் நடைபெற்ற அகில இந்தியப் பனைத் தொழில் வல்லுநர் மகாநாட்டிற்குத் தலைமை தாங்கி பல கருத்துக்களை வெளியிட்டார். கயிற்றுப்பாலம் மூலம் பனை கடத்தல் முறையை ஊக்குவித்தார். இதுவரை கதர், கிராமக் கைத்தொழில்கள் கழகத்தின் தலைவராகப் பணியாற்றி வந்தார். இனியும் நமது பனைத் தொழில் பல விதத்திலும் மேம்பாடடையச் செய்வதற்கு ஊக்கமளிப்பார் என்பதில் ஐயமில்லை.

கிராமங்களில் ஏழை மக்களுக்கு இன்று அதிதீவிரமாக பணியாற்ற வேண்டுமென்று திரு. காமராஜ் உறுதி பூண்டுள்ளார். பனைத் தொழில் அபிவிருத்தியிலும் அவர் கவனத்தை ஈர்க்கும் என்றும் நம்புகிறோம்.

பனைத் தொழில் வளர்ச்சிக்கு மேலும், மேலும் இவ்விரு தலைவர்களின் சேவையை நாம் வரவேற்கிறோம்.

கதர் கிராமக் கைத்தொழில் போர்டின் தலைவராக வந்துள்ள கூட்டுறவு அமைச்சர் திரு. மன்றாடியார் அவர்களை வரவேற்கிறோம். பனைத் தொழில் கூட்டுறவால்தான் வளர்கிறது. எனவே பனைத் தொழில் கூட்டுறவு இயக்கத்தால் மேன்மேலும் வளர எல்லா சந்தர்ப்பங்களும் ஏற்பட்டு விட்டன.

பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள எல்லா கூட்டுறவு சங்க மெம்பர்களின் சார்பில் இம்மூவருக்கும் பனைச் செல்வம் தன் பெரு மகிழ்ச்சியை தெரிவித்து, அவர்களுடைய சேவையைப் போற்றுகிறது.

வே. வ. இராமசாமி.



தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், பனைத் தொழிலும்

சென்ற செப்டம்பர் மாதம் 22-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவில் மாயவரத்தில் சென்னைப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனக் காரியதரிசி திரு. கே. சம்பந்தமும், தஞ்சை கிராமக் கைத்தொழில் அதிகாரி திரு. பாலசுப்பிரமணியமும், தவத்திரு குன்றக்குடி அடிகளாருடன் பனைத்தொழில் அபிவிருத்தி பற்றி விவாதித்தார்கள். அவ்வமயம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் இத்தொழிலில் தமக்குள்ள ஆர்வத்தை வெளியிட்டார்கள்.

பனைத்தொழில் அபிவிருத்தி சம்பந்தமாக அடிகளார் செய்துள்ள காரியங்களைக் குறிப்பிட்டார்கள்.

(1) தமது ஆதீனத்துக்கு அருகிலுள்ள சிருவயல பனைவெல்லக கூட்டுறவுச் சங்கத்தை புதுப்பித்ததாக அவர்கள் சொன்னார்கள்.

(2) மற்றும் அருகிலிருக்கும் பல கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், காரியதரிசிகள், உறுப்பினர்கள் ஆகியோர் அடங்கிய கருத்தரங்கை அவர்கள் கூட்டி, குடிசைத் தொழில்கள் மூலம் கிராம மக்களுக்கு எப்படி வேலை வாய்ப்பு அளிக்கலாம் என்று கூறினார்கள்.

(3) ஒவ்வொரு பனைவெல்லக் கூட்டுறவு சங்க உறுப்பினரும் 25 பனைகளை நடவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டதாக அடிகளார் அவர்கள் தெரிவித்தார்கள்.

கடந்த ஆண்டில், தஞ்சையில் நவீன முறையில் பதநீர் விற்பனை செய்வதை பார்த்ததாகவும், அது நல்ல முறையில் செயல்படுவதாயும், இதே மாதிரி தமது கிராமத்துக்கு அருகிலுள்ள காரைக்குடியில் நடத்த வேண்டுமென்ற தமது அவாவைத் தெரிவித்தார்கள்.

குடியிருப்புகள் கட்ட வசதி

பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை அடிகளார் தீவிரமாக ஆதரித்தார்கள். ஆதீனத்துக்குச் சொந்த நிலத்தை ஒதுக்க முடியுமா என்று சம்மேளனக் காரியதரிசி திரு. கே. சம்பந்தம் கேட்டதற்கு தம்மை பின்னர் சந்திக்குமாறு அவர்கள் தெரிவித்தார்கள்.

சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனம், பனைத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளையும், ஆற்றிவரும் பணிகளையும் சம்மேளனக் காரியதரிசி விளக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறினார். ஆதீனத்துக்கருகில் குடியேற்றுத் திட்டம், நவீன முறையில் காரைக்குடியில் பதநீர் விற்பனை செய்தல் போன்ற காரியங்களைச் செய்ய மாநில சம்மேளனம் தயார் என்றும் கூறினார்கள்.

நவீன முறையில் தயாரிக்கப்பட்ட கற்கண்டு அடிகளாருக்கு வழங்கப்பட்டது. அவர்கள் இம்முயற்சியைப் பெரிதும் மெச்சினார்கள். இவற்றிற்கு தமது முழு ஆதரவை அளிப்பதாக அவர்கள் தெரிவித்தார்கள்.

> நமக்குத் தேவையான வெல்லமும், சீனியும் பனைகளில் இருந்து உற்பத்தி செய்யப்பட்டுவிட்டால், நல்ல விளைச்சல் பூமியில் கரும்பு சாகுபடிக்கு அவசியமே இருக்காது.
>
> —வினோபாஜி.

நாடகப் பகுதி

பதநீர் பானம்

திரு. கே. சம்பந்தம் & திரு. என். சி. எஸ். சௌந்தரராஜ்

★

இடம்: வீடு.

உறுப்பினர்: கமலம், தகப்பனார், கோபு, வாசு.

[தகப்பனார் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து பேப்பர் வாசித்துக்கொண்டிருக்கிறார். வாசுவின் தாயார் ஒரு தட்டில் மூன்று பதநீர் பாட்டில்களைக் கொண்டுவந்து விநியோகம் செய்கிறாள்.]

தகப்பனார்: ஏது காலை காப்பி கயா போலிருக்கு! என்ன கமலம்? பதநீரைக் கொடுத்து காலைக் காப்பியை நிறுத்தி விட்டாயா? வரவர பிரிஹிஸ்டாரிக் பிரியடை (Pre-historic) நோக்கியே போயிக்கிட்டு இருக்கியே!

கமலம்: காலையில் பதநீர் பருகுவது உடலுக்கு நல்லதுங்க.........(சொல்லிக்கொண்டே பாட்டிலை நீட்டுகிறாள்.) பழைய காலத்திலே நூறு, நூற்றம்பது வயசுவரைக்கும் உயிரோடு இருந்தாங்க; நல்லா ஒழைச்சாங்க. இப்போ இருபது வயதிலேயே கிழமாயிடுறோமே! காரணம் இயற்கை உணவைப் புறக்கணிப்பதுதான். பதநீர் சத்து நிறைந்த பானம். இதைப் பருகிவந்தால் மரணத்தைக்கூட வெல்லலாம்.

தகப்: சரி! சரி!...இது என்ன குச்சு?

கம: சுகாதார முறைப்படி பாட்டிலில் வாய் படாமல் உறிஞ்சுக் குடிப்பதற்கான குழாய்.

தகப்: ஓகோ! ஏது ரொம்பத் தீவிர பதநீர் ரசிகையாகி விட்டாய் போலிருக்கே!......எங்க தாத்தா காலத்திலே இதெல்லாம் (குச்சை எடுத்துக் காட்டிக்கொண்டே) ஏது?......... இப்போ காப்பிக் கொட்டை நல்லாயில்லை .....கலப்படம்! சீனியோ கிடைக்க வில்லை!! அதிகாலையில் காப்பி போட தண்ணீர் பிடிக்கக் குழாயடிக்குச் சென்றால் குழாயில் தண்ணீர்கூட வருவதில்லை! காலையில் எழுந்து காப்பி போடவும் சௌகரியமில்லை! எல்லாம் சேர்த்து நன்றாய்ச் சொல்லிவிடு.........ஹூம்........சரி........ பட்டணத்துப் பதநீர் குடித்தாவது பார்ப்போம் [பாதி குடித்து விட்டு] பேஷ்! ரொம்ப அருமை! பிரமாதம்!! இந்தப் பதநீர் எங்கே கிடைக்குது?

[இதற்குள் கோவிந்தன் ஓடி வருகிறான். தனக்கு வைத்துள்ள பதநீரை ஒரே மூச்சில் உறிஞ்சு விடுகிறான்.]

கம: (பையனைத் தடவிக்கொண்டே) ஏண்டாப்பா இவ்வளவு அவசரம்! நிதானமாக குடிக்கிறதுதானே?

கோவிந்தன்: காலையில் எழுந்ததும் பல் துலக்கிவிட்டு வெறும் வயிற்றோடு பதநீர் குடிச்சா உடம்புக்கு ரொம்ப நல்லதம்மா!......எங்க ஸ்கூல்லேகூட கொடுக்கிறாங்களே!!

தகப் : போடா போ! பழைய காலத்திலே பனந்தோப்புக்குப் போனு பட்டை பட்டையா ப்தநீர் குடிப்போம்! இப்போ என்னமோ பாட்டில்லே ஊத்திக் கொடுக்கிறதைப் பிரமாதப்படுத்துறீங்களே! ஸ்கூல்லே குடிச்சா என்ன!? குளக்கரையிலே குடிச்சா என்ன!? எல்லாம் பதநீர்தான்!...சந்திர மண்டலத்துக்குப் போகிற ஆராய்ச்சியிலே இறங்கி இருக்கிற நேரத்திலே சாதாரணப் பதநீரைப் பற்றிப் பெருமை பேச நீயும் வந்துட்டியா?

கோவி : இதோ வாசுகூட வர்றுனே! அவனேயே கேட்டுப்பாருங்க?

வாசு : என்னப்பா ஒரே அமர்க்களம்?

கோவி : பேச்சு ஒரே இனிப்பு!

வாசு : தித்திப்பான பேச்சா? நான் வந்த நேரம் நல்ல நேரந்தான்!...... ..எதைப் பற்றி பேசுறீங்க?

கோவி : நம்ப ஸ்கூல்லே பதநீர் கொடுப்பதைப் பற்றிதான்!

வாசு : ஓகோ! அதுவா? ரொம்ப 'ஸ்வீட்' ஆச்சே! அதுமட்டுமா நோஞ்சான்க ளெல்லாம் பயிலவான்களாகிறதுக்கு இதைத் தவிர வேறு நல்ல மார்க்கமே இல்லியே!

தாயார் : உரக்கச் சொல்லுடா! உங்க அப்பா காதிலெ நல்லா விழட்டும்!

வாசு : அப்பா, அப்பா! கேளுங்கப்ப

தகப் : கேக்கிறேண்டா ராஜா! சொல்லுடா!

வாசு : எங்க ஸ்கூல்லேகூட தினந்தினம் பதநீர் தாருங்கன்னு சொன்னேனில்லே! ஏன் தெரியுமாப்பா? பதநீரிலே வைட்டமின் 'பீ' காம்பளக்ஸ் இருக்குன்னு எங்க டீச்சர் சொன்னுங்கப்பா!

[திருப்புக் காட்சி]

(1) பாடசாலையில் மணி அடிக்கிறது—வரிசை வரிசையாக நின்று மாணவர்கள் பதநீர் பருகுகின்றனர்—குழந்தைகளின் முகம் மலர்ச்சியுடன் காணப்படுகிறது.

(2) வகுப்பு அறை—பதநீர் பற்றிய ஊட்டச் சத்துக்கள் பற்றிய விளக்கப்படங்களை ஒரு ஆசிரியை மாணவர்களுக்கு விளக்கிக் காட்டுகிருர்.

குறிப்பு :
(1) ரத்த நாளங்கள் வலுவடைதல்.
(2) தசைகள் பலமடைதல்.
(3) நரம்புகள் உறுதி பெறுதல்.
(4) கல்லீரல், கணயம் நலமடைதல்.
(5) கண் பார்வை துல்லியமாதல்.
(6) புஷ்டி ஏற்படுதல்.
(7) மேனி மினுமினுப்படைதல்.
(8) சுறுசுறுப்பு உண்டாதல்.
(9) சில நோய்கள் தீர்க்கப்படுதல் முதலிய படங்கள்.

தகப் : இப்போ எனக்கு நல்லா நினைவுக்கு வருகிறது (பனைச் செல்வம் பத்திரிகையையும், பனைத் தொழில் புத்தகத்தையும் அலமாரியில் தேடிக்கொண்டே...) 'பனைச் செல்வம்' பத்திரிகையிலேகூட பதநீர் பற்றிய கட்டுரையை நான் வாசித்திருக்கேன்!

(பத்திரிகையை எடுத்துப் புரட்டிப் பார்க்கிருர்.)

கம : பின்னே ஏன் தெரியாத ஆள்போல நடிக்கிறீங்க?

தகப் : நாடகமே உலகம் ! [பெருமூச்சு விட்டுக்கொண்டே......] நீங்க எல்லாம் பதநீரைப் பற்றி விளக்கம் தர ஆரம்பித்தபின்னே என் பழங்காலக் கதையைப் பேசத்தான் முடியுமா? இதுவோ 'காப்பி—டீ சகாப்தம்'! இதை மாத்திடனுமின்னு மாநில சம்மேளனம் பத்து நயா பைசாவுக்கு சுத்தமான பதநீர் விநியோகிக்கிறது...... வாசுவை போலவும், கோப்புவைப் போலவும் நான் சிறுவனாக இருந்த காலத்திலே எங்க கிராமத்துக்குப் பக்கத்திலே உள்ள தோப்புக்குப் போய் மரத்தடியிலேயே பதநீர் குடிப்போம். இப்போ என்னடான்னு... .....

வாசு : ஏம்பா, பதநீரை ரொம்பக்காலமா எல்லோரும் குடிக்கிறுங்களோ ?

தகப் : பின்னே !? காப்பி—டீ எல்லாம் நேத்து வந்தது:.....பசுமையான ஓலைப்பட்டையில் அதிகாலையில் பதநீர் வாங்கிக் குடிச்சா (நாவில் நீர் ஊறுகிறது)......எவ்வளவு அருமையா இருக்கும் தெரியுமா? பதநீர் குடித்துவிட்டு வியர்க்க வியர்க்க விளையாடுவோம்......பதநீர் இப்போ மட்டும் அல்ல என் தகப்பனர் காலத்திலே... உன் தாத்தா பாட்டி காலத்திலேயே எல்லோரும் ருசித்துச் சாப்பிட்டுவந்த பானம்! உங்க அம்மாவும், உங்க பள்ளிக்கூடத்திலேயும் புதுசா குடுத்திடல !

வாசு : அப்படியா?...அப்பா ! அப்பா ! பதநீர் எப்படிக் கிடைக்கிறது ? சொல்லுங்கப்பா !

தகப் : (சிரித்துக்கொண்டே)......வாசு, அதோ அந்தப் பனைமரத்தை பார் ! [தூரத்தில் தெரியும் பனைமரத்தைச் சுட்டிக் காட்டுகிருர்.] அந்தப் பனைமரத்திலிருந்துதான் பதநீர் கிடைக்கிறது.........

[திருப்புக் காட்சி]

[முத்துச்சாமி என்ற பெயருடைய பனைத்தொழில் வல்லுநர் தெம்மாங்குப் பாட்டு பாடிக்கொண்டே பனைமரத்தில் ஏறுகிருர். (பனையேறும் பல முறைகளும் காட்டப் படலாம்)-பாளை சீவுகிருர்-கலயத்தைக் கட்டுகிருர்—பதநீர் சொட்டுப் போடுகிறது—மரத்தை விட்டுக் கீழே இறங்குகிருர்—அடுத்த மரத்தில் ஏறுகிருர்—குடுவை குடுவையாகப் பதநீர் இறக்கிக்கொண்டு வருகிருர்—மண் பானைகளில் பதநீரை ஊற்றிவிட்டுப் போகிருர்—அருகில் உள்ள ஒரு பெண் அதை எடுத்து, தலையில் சுமந்து செல்லுகிருள்.]

வாசு : ஏம்பா, அந்த ஆள் சர்க்கஸ் வித்தை பண்ருரா ? (கயிற்றுப் பாலத்தின் மூலம் பனை கடப்பவரைப் பார்த்து விரலால் சுட்டிக்காட்டிக் கேட்கிருன்.)

தகப் : இல்லேடா கண்ணு, அதோ பாரு.....மரத்தை ஒட்டிப் பிடிச்சுக்கிட்டு ஏறுகிருரல்ல? அப்படி ஏறினல் கால், உள்ளங்கை, நெஞ்சு எல்லாம் புண்ணுகி, தடிப்புத் தடிப்பா மாறிவிடும். அப்படிப்பட்டவங்களைப் பார்க்கிறதுக்கே விகாரமா இருக்கும். இதுமாதிரி ஏற்படாமெ இருக்கணுமின்னுதான் பல பனைகளை ஒண்ணுகக் கயிறுகளால் இணைத்துக் கட்டி ஏறுகிருங்க: இதனாலே ஏறுகிற சிரமமும் குறையும்! அதிக மரமும் ஏறலாம் தெரிஞ்சுதா.

வாசு : (மூக்கின்மேல் விரலை வைத்துக்கொண்டு மிகுந்த ஆச்சரியத்தோடு) அப்படியா ?

[பானைகளில் ஊற்றி வைக்கப்பட்டுள்ள பதநீரை எடுத்துச் செல்லும் பெண் ரஸ்தாவை அடைகிருள்—அங்கு முந்தின தினத்தில் குடித்துவிட்டுப் போட்டுச் சென்ற ஓலைப் பட்டைகள் குவிந்து கிடைக்கின்றன—வழியில் வரும் மிகச் சாதாரண மக்களே பட்டையில் வாங்கிப் பருகிவிட்டு, அதை விட்டெறிந்துவிட்டுச் செல்லுகின்றனர். அதைக் கடந்து செல்லும் நாகரீக மனிதர்கள் அதைப் பார்த்துவிட்டு அருவருப்புக் கொண்டவர்களைப்போல் அலட்சியமாகச் செல்லுகின்றனர்.]

தகப்: இப்போது தெரிஞ்சுதா பதநீர் இறக்குவது எப்படீன்னு ?

கோபு: அப்பா சொல்றதெல்லாம் அவங்க அப்பா காலத்திலெ'

தகப்: இவர் பெரிய ஆளு! ஏதோ நாலு தலைமுறையைப் பார்த்த மாதிரி பேசுறீயேடா ? எங்கே, உன் காலத்திலெ எப்படீன்னு சொல்லேன் பார்க்கலாம் ?

கோபு: சொல்லட்டுமா ?......காந்தியடிகள் [படத்தைப் பார்த்துக்கொண்டே......] கிராமக் கைத்தொழில்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடத் தொடங்கிய நாளிலிருந்து......

[நிருப்புக் காட்சி]

[பதநீர் இறக்கும் முறை: ராமு என்பவர் ஒரு பனைத்தொழில் வல்லுநர். அவருடைய சிறு வீடு சகல வசதிகளும், நவீன பனையேற்றுக் கருவிகளையும், பதநீர் காய்ச்சும் நவீன அடுப்புகளையும், கொப்பரைகளையும் கொண்டதாக உள்ளது. வீட்டிலிருந்து தெம்மாங்குப் பாட்டுப் பாடிக்கொண்டே பனையேறுவதற்காகப் புறப்படுகிறார்-நல்ல உடை அணிந்திருக்கிறார்—கயிற்றுப் பாலத்தின் மூலம் எளிதாகப் பனை கடக்கிறார்—துத்தநாகத் தகட்டுக் குடுவையில் பதநீர் சேர்க்கிறார்—கயிற்று மூலம் மறு பனையிலிருந்து இறங்குகிறா—பித்தளைக் கேன்களில் வடிகட்டும் துணி மூலம் ஊற்றுகிறார்—நாலு வல்லுநர்கள் அவ்விதம் வந்து ஊற்றுகின்றனர்—கேன்களில் பதநீர் சேகரிக்கப்படுகிறது—அருகில் மாநில சம்மேளன ஊர்தி நிற்கிறது—ஊர்தியில் கேன்கள ஏற்றப்படுகின்றன—வண்டி புறப்படுகிறது.]

வாசு: அண்ணே, இந்தப் பதநீரை எங்கே கொண்டு போறுங்க ?......குடிக்கவா ?

கோபு: ஆமா ! இப்படியே விநியோகம் செய்யமாட்டாங்க !

வாசு: பின்னே கலப்படம் பண்ணுவாங்களோ ?

கோபு: அட, அரைகுறை அவசரப் புத்திக்காரனே ! சொல்றதை முழுக்கக் கேளு...... கொஞ்சம் பொறு......வண்டியிலே வந்த பதநீரை குளிர வைப்பார்கள்...... அல்கதீன் புட்டிகளில் ஊற்றி நிரப்பி மூடி போடுவார்கள்...புட்டி தானக வந்து உன் வாய்க்கிட்டே நிற்கும் !......பாரேன் !?

(1) பதநீர் எடுத்துவந்த வண்டி மாநில சம்மேளன வாசலில் நிற்கிறது—கேன்கள் இறக்கப்படுகின்றன—கையில் ரப்பர் உறை போட்டவர்களால் வடிகட்டப்படுகிறது—P. H. சோதிக்கப்படுகிறது—சுண்ணாம் அதிகம் உள்ள கேன்கள் விலக்கப் படுகின்றன—குளிர்பதனப் பெட்டிகளில் பதநீர் ஊற்றப்படுகிறது—

(2) அல்கதீன் பாட்டில்கள்—மெஷின் மூலம் பெண்களால் கழுவப்படுகிறது—கழுவப்பட்ட புட்டிகள் சுத்தமான டிரேயில் அடுக்கப்படுகின்றன—குளிர்பதனப் பெட்டி அருகில் வைக்கப்படுகிறது—நள்ளி (Tap) மூலம் பாட்டில்கள் நிரப்பப்படுகின்றன—பதநீர் நிரப்பப்பட்ட பாட்டில்கள் இன்சுலேட்டட் பெட்டிகளில் எண்ணி அடுக்கப் படுகின்றன—மூன்று சக்கர மோட்டார் வண்டிகளில் பெட்டிகள் அடுக்கப்படுகின்றன-விற்பனைக்கு அவை கொண்டுசெல்லப் படுகின்றன

(3) பதநீர் விற்பனை நிலையம்—அழகான முறையில் நாற்காலிகள் போடப்பட்டுள்ளன—நல்ல உடையணிந்த ஒருவர் பதநீர் கொடுக்கிறார்—பாட்டிலைத் திறந்து உறுஞ்சுக் குழாயைப்போட்டு அருந்துகின்றனர்—சிறு குழந்தைகள் மலர்ந்த முகத்தோடு அருந்துகின்றன.

(4) மற்றொரு பதநீர் விற்பனை நிலையம்—கூப்பனுக்காகப் பலர் வரிசையில் நிற்கின்றனர் கூப்பன் வழங்கப்படுகிறது—பதநீர் அருந்திவிட்டு அமைதியாகச் செல்கின்றனர்—[வாசு, காலண்டரையும், கடிகாரத்தையும பார்த்துவிட்டு]

வாசு: இதுதான் பதநீரின் கதையா?......அடடே! டைம் ஆச்சே! ரேடியோவைத் திருப்பு!

கோபு: திருச்சி ஸ்டேஷனுடா?

வாசு: இல்லெ! இரயில்வே ஸ்டேஷன்......நாம் இப்போ திருச்சியிலேயா இருக்கோம்... (கமலம் வீட்டுக்குள்ளிருந்து வருகிருள்.) அம்மா, சென்னை ஸ்டேஷனைத் திருப்புங்கோ!

ரேடியோ: ....ஆகாஷ்வாணியின் சென்னை வானொலி நிலையம்......இன்று அகில இந்திய பனைவெல்ல தினம்......'பதநீரின் போஷாவுக்கு' என்னும் பொருள்பற்றிய உரையை நீங்கள் கேட்கலாம்.

பேச்சு: இன்று தேசிய பனைவெல்ல தினம். ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 23-ம் தேதியை பனைவெல்ல உற்பத்தியாளர்கள் திருநாளாகக் கொண்டாடுகின்றனர். நம் இந்தியப் பேரரசு பனைவெல்லத் தொழில் வளர்ச்சியில் அக்கறைகொண்டு 1947-ம் ஆண்டு டிசம்பர் 23-ம் நாள் முதல் தனிக் கவனம் செலுத்தத் தொடங்கியது. அதன் நினைவாகவே இத்தினம் நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. இந்த தினத்தில் பதநீரைப்பற்றி விரிவாகவும்—விளக்கமாகவும் எடுத்துச்சொல்ல நான் கடமைப் பட்டுள்ளேன்.

பருவகாலங்களில் பனை, தென்னை, ஈந்து, சாகோ ஆகிய பனைச்சாதி மரங்களில் தோன்றும் பாளைகளைப் பதப்படுத்தி, கூர்மையான அரிவாளால் சீவி, பாளை முகத்தி லிருந்து சொட்டுச் சொட்டாக சேகரமாகும். இனிமையான பானத்திற்குப் பதநீர் என்று பெயர். மிகப் பழைய காலத்தில் மன்னர்களும், மாமேதைகளும் இதை விரும்பிப் பருகியுள்ளனர். இதன் மேம்பாட்டின் நிமித்தமே இதைத் தேவாமிர்தம் எனப் போற்றினர்.

பதநீரைப் பல இடங்களில் வெவ்வேறு பெயரிட்டழைக்கின்றனர். அமிர்தம், புதுமது, தெள்ளமுது, பசுநரு என்றெல்லாம் மிகப்பழைய ஏடுகளில் குறிப்பிடப் பட்டுள்ளன. நறை, நரு என்றால் இனிமையானது என்று பொருள். இலங்கையில் பதநீரை இன்றளவும் 'கருப்ப நீர்' என்றே அழைக்கின்றனர்.

பதநீரைப்பற்றி எல்லோருக்குமே நன்கு தெரியும். ஆனால் எப்படிக் கிடைக்கிறது என்பதை ஒரு சிலரே அறிவர். உலகில் பலவகைபட்ட பனைச்சாதி மரங்கள் உள்ளன. அவைகளில் பனை, தென்னை, கூந்தல் பனை, ஈச்சமரம் ஆகிய நான்கு வகை மரங்கள் மட்டுமே நம் நாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சிறப்பாக நமது மாநிலத்தில் பனை மரங்களிலிருந்தே பதநீர் இறக்கப்படுகிறது. கோவை மாவட்டத்தில் மட்டும் தென்னையிலிருந்து பதநீர் இறக்குகிறார்கள்.

பனைகள் ஆண், பெண் என இரண்டு வகைப்படும். ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதக் கடைசி வாரத்திலிருந்தோ, ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தி லிருந்தோ ஆண் பனைகளில் பாளைகள் தோன்றத் துவங்கும். ஆண் பனைப் பாளை பிஞ்சுப் பாளையாக இருக்கும் நிலையிலேயே இடுக்கிப் பதநீர் இறக்குவதற்கு 'கட்டுப் பாளைப் பதநீர்' என்று பெயர். இதைப்போலவே பெண். பனைகளில் சிறு குரும்பைகள் தோன்றியவுடன் அதை இடுக்கிப் பதப்படுத்திச் சீவி வடிக்கப்படும் பதநீருக்குப் 'பருவப் பதநீர்' என்று பெயர். பெண் பனையில் நுங்குக் காய்கள் முற்றியபின் பதநீர் எடுப்பதும் உண்டு. இம்மாதிரி இறக்கப்படும் பதநீருக்குப் 'பண்ட பாளைப் பதநீர்' என்று பெயர்.

பதநீர் ஒரு சிறந்த பானம். இதில் பல ஊட்டச் சத்துக்கள் நிறைந்துள்ளன. இயற்கையாகவே கிடைக்கும் இப்பதநீர் உடலின் வெப்பத்தைத் தணித்துப் புத்துணர்ச்சியை அளிக்கிறது. இதைப் பள்ளிக் குழந்தைகளுக்குத் தொடர்ந்து கொடுத்துப் பரிசோதனை செய்ததில் அவர்களின் எடை அதிகரிப்பும், முகப்பொலிவும், ரத்த விருத்தியும், சுறுசுறுப்பும் ஏற்படுவது கண்டுபிடிக்கப்பட்டது.

பதநீரில் குளுக்கோஸ், கால்சியம், இரும்புச்சத்து, 'பி' உயிர்ச்சத்து முதலியன திருப்திகரமான அளவு உள்ளன. இவை அனைத்தும் மனிதன் சுகமுடன் வாழ்வதற்கு வேண்டிய இன்றியமையாத உணவுச் சத்துகளாகும். பதநீர் ஓர் அற்புத மான டானிக். இதிலுள்ள சீனிச்சத்து உடலுக்கு வெப்பத்தையும், வேலை செய்யச் சக்தியையும் கொடுக்கிறது. மெலிந்து, தேய்ந்து வாடிய குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால் பதநீரிலுள்ள குளுக்கோஸ் உடல் வளர்ச்சியைக் கொடுக்கிறது. கணையம், கல்லீரல், ரத்த நாளங்கள், நரம்புகள் வலுவடைகின்றன; இரத்த விருத்தி ஏற்படு கிறது. பற்களும், எலும்புகளும், வலுவடைகின்றன. கர்ப்பிணிகளுக்கும், தாய்மார் களுக்கும் இது ஒரு நல்ல உணவு. எனவே ஊட்டச்சத்துள்ள பதநீரை அன்றாடம் பருகிப் பயனடையத் தவறாதீர்கள். வணக்கம்.

[இப்பேச்சு ஒலி பரப்பப்படும்பொழுது அதற்கு ஏற்ப காட்சிகளை அமைத்துக் காட்டலாம். (உ-ம்) நான்கு வகைப் பனைச்சாதி மரத்தை அந்தந்தப் பெயரைக் குறிப்பிட்டுப் பேசும்போது காட்டலாம்.]

தகப்: அடேயப்பா! இன்னிக்கு யார் முகத்திலெ முளிச்சேமோ தெரியல்லே! எல்லாம் பதநீர் மயம்—பனை மயம்!

வாசு: ஏம்பா சந்தேகம்? நம்ப கொல்லையில் இருக்கிற பனை மரத்திலே முழிச்சிருப்பீங்க.

[எல்லோரும் சிரிக்கின்றனர்.]

—[திரை]—



நவீன முறையில் உறுதியான புத்தக அட்டை

' புத்தகங்களின் மேலுறைகளை நவீன முறையில் எப்படி ஆக்குவது என்பது குறித்து நடைபெற்ற ஆராய்ச்சிகளின் பலனாக நைட்ரஜன் 'லேக்கர்' என்ற பசையுடன் கூடிய 'சல்போ செல்லுலோஸ்' தாள் உறைகளை சோவியத் யூனியன் கண்டு பிடித்துள்ளது. இந்த உறை மிகவும் உறுதியானது; இதன்மீது வரையப்படும் படங்கள் மிகத் தெளிவாகவும் காணப்படுகின்றன. மேலும், சாதாரணமாகப் போடப்படும் புத்தக உறைகளைக் காட்டிலும் இவைகளின் விலையும் மிக மலிவே.

 குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ குன்றி அனைய செயின்

பனையே, வாழி!

கோ. செல்வம், M.A., B.L., B.T.

பாற்கடலைக் கடையாமல் கிடைத்த அமிழ்தம்
பைந்தமிழைப் பாடாமல் கிடைத்த தேனும்
பேர்கொண்ட மருத்துவரின் துணையே யின்றிப்
பெரும்பிணியைப் போக்குகின்ற மருந்தாம் பானம்
ஆர்வமற்றுப் போனவுடல் ஆற்றல் பெற்றே
அழகுதர விருந்தான தெய்வப் பாலாம்
தேரமர்ந்து வீதிவரும் தேவன் தந்த
தித்திக்கும் தீர்த்தமாகும் **பனையின் சாறே!**

பகட்டாலும் வாழ்விலெல்லாம் பண்பு வீழும்
பசப்போங்கும் நாவிலெல்லாம் இனிமை மாயும்!
மிகச்செய்த ஒப்பனையில் உண்மை ஏது?
மினுக்கிவிட்ட உருவத்தில் வனப்பு ஏது?
புகழ்ச்சியில்லா எட்டிக்கோ கவர்ச்சி உண்டு
புவியோர்க்கு இனிப்புதரும் குணந்தான் உண்டா?
இகழ்ச்சியாகக் கருதிடுவார் பனையைப் பார்த்தால்
இனிப்பான செல்வந்தான் அதனுள் உண்டே!

படிக்கின்ற பாலகனும் குடித்து விட்டால்
படிப்பிலவன் முதல்வனுகத் தேறு கின்ருன்!
மடிகின்ற நோயாளன் பருகி வந்தால்
மாடுபிடி சண்டைக்கு வரிந்து நிற்பான்
வடிகின்ற **பதநீரை — பனையின் சாற்றை**
வழக்கமாக அருந்துவோர்க்கோ வாழ்க்கை இன்பம்!
குடிக்கின்ற நமக்கெல்லாம் வலிமை சேர்க்கும்
குடைதருவே! பதநீரே! வாழ்த்து கின்றேன்!

விசித்திர ஏணி

மேற்கு ஜெர்மனியில் ஆல்பிரட் நோவாக் என்பவர் விசித்திர ஏணி ஒன்றை கண்டுபிடித்திருக்கிறார். கைகளையே உபயோகிக்காமல் இந்த ஏணியின் மூலம் எவ்வளவு உயரம் வேண்டுமானாலும் ஏறி வேலை செய்யலாம். இதில் ஏறியிருக்கும்போது எவ்வித விபத்தும் ஏற்படாமல் இருக்க வழி செய்யப்பட்டுள்ளது. ஆகவே உயர ஏற சிறு ஏணிகள் பலவற்றைக் கொண்டு இணைத்து பெரிதாக செய்து கொள்ளும் அவசியம் இனி இல்லை. இரு கயிறுகளுக்கிடையே, ஏணியில் வேலை செய்யும் தொழிலாளி மேலும் கீழுமாக ஏறி இறங்க முடியும். காலைத்தூக்கி மேலே வைத்தால் கயிறு தானாகவே இயங்கி வேலை செய்கிறது. மிக உயரத்தில் வேலை செய்யும் தொழிலாளி கீழே இறங்க விரும்பினால் லீவரை திருப்பிவிட்டு ஒவ்வொரு படிக்கும் ஒரு சிறிதளவு மட்டுமே காலை உயர்த்தவேண்டியிருக்கும். ஒரு அடி எடுத்து வைத்ததும் பிரேக்குகள் தானாகவே இயங்குகின்றன. இரு கால்களுமே நகர்த்தப் பட்டு விட்டாலும் குப்புற கீழே விழவேண்டிய அவசியம் ஏற்படாது. இதில் கால் தவறி கீழே விழுவதற்கான ஏதுவே இல்லை.

இதேபோல் சிரமமின்றி பனை ஏற நாமும் நூதன ஏணி காண வேண்டாமா!

ரஷ்யாவில் திரைப்பட விழா

மாஸ்கோவிலுள்ள யுடர்னிக் சினிமாக் கொட்டகையில் 10 தினங்கள், இந்தியத் திரைப்பட விழா நடைபெற்றது. மிகுந்த ஆர்வத்துடன் சோவியத் மக்கள் இந்த விழாவில் பங்கெடுத்துக் கொண்டனர். 50 ஆண்டுகள் நிரம்பப்பெற்ற இந்தியத் திரைப்படத் தொழிலின் சமீபகாலத் தயாரிப்புகளை மாஸ்கோ மக்கள் கண்டு களித்தனர். பிரபலமான இந்திய டைரக்டர்களால் தயாரிக்கப்பட்ட பல திரைப்படங்கள், தற்சமயம், "டிபிலிஸ்", "எரிவான்", "பாகு", "டாஸ்கண்ட்" முதலிய பகுதிகளில் திரையிடப்பட்டு வருகின்றன.

மாஸ்கோவில், இதற்கு முன்னால் பல இந்தியப் படங்கள் திரையிடப்பட்டுள்ளன. 'இரண்டு ஏக்கர் நிலம்', 'புயல்', 'கங்கை' முதலிய படங்களையும், ராஜ்கபூரின் படங்களையும், சோவியத் மக்கள் ஏற்கனவே பார்த்துள்ளனர். பிரபலமான இப்படங்களின் நினைவு இன்னும் அவர்களுடைய மனத்தை விட்டு நீங்கவில்லை.

சமீபத்தில் நடந்த விழாவில், மதராஸ், பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் தயாரிக்கப்பட்ட 10 படங்கள் திரையிடப்பட்டன. இப்படங்களில் ஒன்று உளவியல் கதை. மற்றொன்று ஹாஸ்யச் சித்திரம். சில சரித்திரப் படங்களும் உள்ளன.

சமீபத்தில் மாஸ்கோவில் நடந்த அகில உலகத் திரைப்பட விழாவில் ஒரு நீதிபதியாகப் பணியாற்றிய புகழ்பெற்ற இந்திய டைரக்டர் சத்யஜித் ரேயால் தயாரிக்கப்பட்ட இரண்டு படங்கள் திரையிடப்பட்டன. "அபுவின் குடும்பம்", "யாத்திரை" என்ற இந்த இரண்டு படங்களும் திரைப்பட விழாவில் தலைசிறந்து விளங்கின. இதில் நடிக்கும் சுமித்ரா சட்டர்ஜியும், பால்ராஜ் ஷானியும் மிக அற்புதமாக நடித்துள்ளனர். மேலும் இப்படங்கள், பண்புமிக்க இந்திய மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்னைகளையும், அவர்களுக்கு நீதியிலும் நேர்மையிலுமுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையையும் பிரதிபலிப்பதாக உள்ளன. "எந்த நாட்டில் கங்கை பாய்கிறதோ" என்ற திரைப்படமும் மாஸ்கோ மக்களின் கவனத்தைக் கவர்ந்தது. தீயசக்திகளுக்குத் தலைவணங்காது நிமிர்ந்து நிற்கும் ஒரு சாதாரண மனிதனைப் பற்றிய கதையையும், இந்தியப் பாடல்களையும், எழில்மிக்க இந்திய நடனங்களையும், சோவியத் மக்கள் பெரிதும் ரசித்தனர்.

மாஸ்கோ மக்களுக்கு மிகவும் பிடித்தமான சமத்துவம், சகோதரத்துவம், என்ற கொள்கைகளைப் போதிக்கும் "காட்டு மலர்" என்ற திரைப்படம் ரஸிகர்களைப் பெரிதும் கவர்ந்தது. இந்திய நாட்டில் ஏகாதிபத்திய வாதிகளால் சிருஷ்டி செய்யப்பட்ட ஹிந்து—முஸ்லீம் வேற்றுமை, நாளடைவில் மறைந்து ஒற்றுமைமிக்க புதியதோர் சமுதாயம் தோன்றுமென்று இப்படத்தின் கதாநாயகன் ராஜைப் போலவே சோவியத் மக்களும் நம்புகிறார்கள்.

சகோதரப் பாசத்தை வளர்க்கும் "ராகி" என்ற படமும் திரையிடப்பட்டது. பல இடங்களில் ரஷ்ய மக்கள் கரகோஷங்கள் செய்து தங்கள் பாராட்டுதலைத் தெரிவித்தனர். படம்பார்த்தபல மூதாட்டிகள், கதையின் உச்சகட்டங்களில் கண்ணீர் உகுத்தனர்.

இந்தோ—சோவியத் கலாசார, விஞ்ஞான ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில், இந்திய நாட்டின் 16-வது சுதந்திர தின விழாவையொட்டி நடைபெற்ற இந்தத் திரைப்பட விழா வெற்றிகரமாக முடிந்தது. 1500 பேர் உட்காரக்கூடிய "யுடர்னிக்" கொட்டகை, எல்லாக் காட்சிகளிலும் நிரம்பியிருந்தது. ஒரு லக்ஷத்திற்கும் மேற்பட்ட மக்கள் இப்படங்களைப் பார்த்தனர். நேச நாடாகிய இந்திய நாட்டைப் பற்றியும் அதன் மக்களைப் பற்றியும் சோவியத் மக்கள் நன்கு தெரிந்து கொண்டனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடிமைத் தளைகளிலிருந்து விடுபட்ட இந்திய மக்கள் எப்படித் தங்கள் சமூகத்திலுள்ள குறைபாடுகளை, வெறுப்புக்களை, வேறுபாடுகளைக் களைந்தெறிய பாடுபட்டு வருகிறார்கள் என்பதை இப்படங்கள் தெள்ளத்தெளிவாகக் காட்டின.

ரஷ்யாவில் நடந்த இந்தியத் திரைப்பட விழாவும் இனி இந்தியாவில் நடக்கப் போகும் ரஷ்யத் திரைப்பட விழாவும், இவ்விரு தேசங்களுக்குமிடையேயுள்ள கலாசாரப் பிணைப்பை மேலும் பலப்படுத்தும்.

கன்னியாகுமரியில் பனை ஈட்டு முறை

மறைதிரு. T. ஜேம்ஸ் அவர்கள் தரும் ருசிகரத் தகவல்

சென்னை மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனக் காரியதரிசி அவர்களுடன் கன்னியாகுமரி மாவட்டத்தில் பரக்குன்னு ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத தலைவர் மறைதிரு. T. ஜேம்ஸ் அவர்கள் சங்க அபிவிருத்தி குறித்து நடத்திய ஆலோசனையின் போது கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பனை மரச் சொந்தக்காரர்கள் தங்கள் பனைகளை மரம் ஒன்றுக்கு ரூ. 15 விதம் 10 வருடங்களுக்கு அடகுவைக்க முன் வந்துள்ளதாகத் தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிடுகையில் தம்முடைய சங்கத்திற்கு 300 மரங்களை இவ்விதம் அடமானமாக வாங்கியிருப்பதாகவும் கூறினர். இம் முறை நாடெங்கும் பரவுமானல் வீணாக வளர்ந்து பயனற்ற வகையில் இருக்கும் பனைகள் அனைத்தையும் பயன்படுத்த வாய்ப்பு ஏற்படும் என்றும் கருத்துத் தெரிவித்தார். இம்முறையை மாநில சம்மேளனக் காரியதரிசி அவர்கள் வரவேற்றூர்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம், விளவங்கோடு ஆகிய இரு தாலுகாக்களிலும் பனைமரங்கள் ஏராளமாக உள்ளன. இம்மாவட்ட மக்களின் முக்கிய தொழில்களில் பனைத்தொழில் பிரதானமானது. ஏறத்தாழ ஆறுயிரம் பனைத் தொழில் வல்லுநர்கள் பனையை மட்டுமே நம்பி வாழ்கின்றனர். கீழ்க்கண்ட புள்ளி விவரம் இதை நன்கு விளக்குகிறது. இம்மாவட்டத்தில் பனையேற்று அனுமதிச் சீட்டு முறை வழக்கத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்டு	பனையேற்றுத் தொழில் புரிவோரின் எண்ணிக்கை	தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட மரங்களின் எண்ணிக்கை	உற்பத்தி செய்யப்பட்ட பனைவெல்லத்தின் அளவு (25 இராத்தல் கொண்டது)	
			சாதாரணப் பனை வெல்லம்	புது முறையில் தயாரிக்கப்பட்ட பனை வெல்லம்
1948—49 ...	4,884	2,75,040	1,70,000	250
1949—50 ...	4,660	2,88,620	1,82,000	300
1950—51 ...	4,220	2,84,530	1,95,000	300
1951—52 ...	4,780	2,89,500	2,00,000	650
1952—53 ...	4,850	2,80,000	2,15,000	725
1953—54 ...	4,875	2,92,500	2,15,000	250
1954—55 ...	4,890	2,96,000	2,88,500	250
1955—56 ...	4,950	2,93,000	2,25,000	500
1956—57 ...	4,900	2,94,000	2,90,000	500
1957—58 ...	4,960	2,95,000	3,02,500	8,000
1958—59 ...	5,250	3,03,000	3,05,000	10,000
1959—60 ...	5,750	3,17,500	3,14,500	12,000

இம்மாவட்டத்தில் பெரும்பாலும் தென்னஞ் சிரட்டையிலேயே பனம்பாகை ஊற்றிப் பனைவெல்ல வட்டுக்களை உற்பத்தி செய்கிருர்கள். இதை கேரள மாநிலத்திலுள்ள கோட்டயம், கொல்லம், ஆலப்புழை முதலிய சந்தைகளின் மூலம் விற்கின்றனர். திருநெல்வேலி மாவட்டத்திற்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இங்கு பனையோலையினல் பாய் பின்னுதல், விசிறி செய்தல், கூடைமுடைதல் போன்ற தொழில்களும் நடைபெறுகின்றன,

பனந்தும்பு ஏற்றுமதி

கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பனந்தும்பை (Palm Fibre) இங்கிலாந்து, நார்வே முதலிய மேலை நாடுகள்

கொள்முதல் செய்கின்றன. வடசேரி, கோட்டூர், தொடுவட்டி, ஆற்றூர், மண்டே மார்க்கட், களியாகாவிளை, மயிலாடி, புதுக்கடா முதலிய சந்தைகளில் சிறுவீத அளவு பனைப் பொருட்கள் விற்பனை செய்யப் படுகின்றன.

பரக்குன்னு ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத் தலைவரோடு காரியதரிசி அவர்கள் ஆலோசனை நடத்திய போது அவர் தமது சங்கத்தின் வேலைகளைப்பற்றி விளக்கினார். மேற்படி சங்கத்தின் 300 உறுப் பினர்களும் உண்மையுடன் ஒத்துழைப்ப தாகத் தெரிவித்தார். அடமானமாக வாங்கப் பட்டுள்ள பனை மரங்கள் சங்க உறுப்பினர் களுக்கு பதநீர் வாரக் குத்தகைக்கு (Juice Sharing System—50 per cent to the owner 50 per cent to the tapper) விடப்படுவதாக வும், சுண்ணும்பு, பதநீர்க் கொப்பரை முதலி யன சங்கத்தின் மூலம் கொடுக்கப்படுவதாக வும் தெரிவித்தார். இச்சங்கம் உற்பத்தி செய்யும் சாதாரணப் பனைவெல்லம் கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதமும், சுண்ணம் நீக்கப்பட்ட பனை வெல்லம் (Refined Jaggery) கிலோ ஒன்றுக்கு ரூ. 1–20 வீதமும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பனை அடமான முறை

பனை அடமான முறையை மறைதிரு. T. ஜேம்ஸ் அவர்கள் தெரிவித்தபோது காரியதரிசி அவர்கள் சில ஆலோசனைகளைக் கூறினர்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் பரக்குன்னு ஆரம்பப் பனைவெல்லக் கூட் டுறவுச் சங்கத்தை மாதிரிச் சங்கமாகத் தேர்ந் தெடுக்க வேண்டுமென்றும், அதன்படி மாநில சம்மேளனம் ஒவ்வொரு உறுப் பினருக்கும் தேவைப்படும் பனை மரங்களை அடமானமாக வாங்கி, அதை சங்கத்தின் மூலம் உறுப்பினர்களுக்குக் கொடுக்கலா மென்றும், மாநில சம்மேளனம் முதலீடு செய்யும் தொகைக்கு 4 சத விகித வட்டியை ஆரம்பச் சங்கமும், 2 சத விகித வட்டியை ஆரம்பச் சங்கம் உறுப்பினர்களிடமும் வசூலிக்கலாம் என்றும் தெரிவித்தார். இத ஞல் பனைமரச் சொந்தக்காரர்களிடம் உறுப் பினர்கள் போட்டியிட்டுக் குத்தகைக்கு எடுக்க வேண்டிய நிலையைத் தவிர்க்கலாம் என்றும் தெரிவித்தார்கள். மேலும் பதநீர் வார முறையை நீக்க வேண்டுமென்றும், உற்பத்திப் பொருள் பனைத் தொழில் வல்லுநர்களையே சேர வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். மாநில சம்மேளனம் முதலீடு செய்யும் தொகையில் 2 சத விகித வட்டியை மட்டுமே அவ்வாரம்பச் சங்கம் வசூலிக்கலாம். இக்கருத்து விவாதிக்கப் பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. மாநில சம்மேளன நிர்வாகக் குழுவினரால் ஒப்புக் கொள்ளப்பட்டால் பரீட்சார்த்தமாக இத் திட்டம் நடத்தப்படலாம் என அ[illegible] கொண்டனர்.

நாவை அடக்கி நாட்டைக் காப்பீர்!

உரிமையைக் காக்க உறுதி கொள்ளுங்கள்.

கிராமத் தொண்டர் படையில் சேருங்கள்.

சங்கச் செய்திகள்

ஓலைப்பட்டி பனைவெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், S. 980

ஓமலூர் வட்டம் : : சேலம் மாவட்டம்

சங்கம் பதிவு செய்யப்பட்ட தேதி	...	16—8—1948
சங்கம் ஆரம்பிக்கப்பட்ட தேதி	...	13—9—1948
சங்க மெம்பர்களின் எண்ணிக்கை	...	123 பேர்கள்
சங்க மெம்பர்கள் செலுத்திய பங்குத் தொகை	...	ரூ. 498—00
சங்கத்தின் தலைமை இடம்	...	ஓலைப்பட்டி
சங்கத்திற்கு மாவட்டச் சம்மேளனத்தார் ஏற்படுத்திக் கொடுத்த சேமிப்புக் கிடங்கு	...	தொளசம்பட்டி
சங்கத்திற்குச் சம்பந்தப்பட்ட ஏலக்கிடங்கு	...	தாரமங்கலம்

சங்க நிர்வாக சபை அங்கத்தினர்கள் :—(1) திரு. வி. ரங்கசாமி, தலைவர்
(2) திரு. காளியப்ப நாடார், காரியதரிசி
(3) திரு. ராமசாமி நாடார், நிர்வாகஸ்தர்
(4) திரு. ராமு நாடார் „
(5) திரு. மாரி நாடார் „

மேற்படி சங்கம், நிர்வாக சபை அங்கத்தினர்களால் நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி சங்கம் 1959-ம் ஆண்டு ஜனவரி மாதம் சங்கத்தின் மூலம் மெம்பர்கள் உற்பத்தி செய்யும் பனை வெல்லத்தை வாங்கி விற்பனை செய்ய ஆரம்பித்து 1963 ஜூன் முடிய 5 ஆண்டுகளில் 362 மெம்பர்கள் லைசென்ஸ் பெற்று 12,708 மணங்கு 21 ராத்தல் பனை வெல்லம் உற்பத்தி செய்து ஷை வெல்லம் பூராவும் சங்கத்திடம் ஒப்படைத்து, அதை சங்கம் ரூ. 69,772—18-க்கு விற்பனை செய்துள்ளது. சங்கத்திற்கு 5 ஆண்டுகளில் ரூ. 2,093—16 கமிஷன் கிடைத்துள்ளது. சேலம் மாவட்டப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் தாரமங்கலம் கிளை துணை விற்பனையாளர் திரு. கு. பெரியசாமி ஷை கிளைக்குச் சம்பந்தப்பட்ட சங்கங்களுக்குச் சென்று சங்கத் தலைவர்களையும், மெம்பர்களையும் நேரில் பார்த்து, பனை வெல்லம் சங்கத்தின்மூலம் விற்பனை செய்யவேண்டிய விபரங்களை மெம்பர்களிடம் தெளிவாக எடுத்துச்சொல்லி, வியாபாரம் நல்ல முறையில் நடக்கத் தலைவர்களுக்கு உதவி செய்துள்ளார். உற்பத்தி செய்த பனைவெல்லத்தை வாராவாரம் தேங்காமல் முயற்சியெடுத்து விற்பனைச் செய்து, சங்கத் தலைவர்களுச்குப் பண நெருக்கடி ஏற்படாமல் பட்டுவடா செய்தார். ஷை கிளை துணை விற்பனையாளர் செய்த உதவி சங்கத் தலைவர்களுக்கு வெல்ல வியாபாரத்தை அதிகப்படுத்த உற்சாகமடைய இது ஒரு வாய்ப்பாகவும் அமைந்தது.

5 ஆண்டுகளில் பனைவெல்ல உற்பத்தி, விற்பனையான விவரம் வருமாறு:—

வருடம்		வழங்கப்பட்ட லைசென்ஸ்	உற்பத்தி செய்யப்பட்ட பனைவெல்லம்	விற்பனை கிரயம்
			ம. ரா.	ரூ. ந.பை.
1959	...	67	1,948—12	8,944—71
1960	...	72	1,949—12	12,769—58
1961	...	75	2,548—17	12,215—38
1962	...	74	3,231—05	16,741—32
1963	...	74	3,031—00	19,101—19
மொத்தம்	...	362	12,708—21	69,772—18

இவ்விவரத்தை ஓலைப்பட்டிப் பனைவெல்லக் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. வி. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

மாதவரம் பண்ணைக்கு வல்லுநர்கள் தேவை

சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் இவ்வாண்டு ஒரு டன் சீனி ஆலையைத் துவக்க உள்ளது. அதற்காக சென்னை மாதவரத்திலுள்ள அரசாங்க பால் பண்ணையிலுள்ள சுமார் 10,000 பனைமரங்களையும் சுமார் 800 தென்னைமரங்களையும் குத்தகைக்கு எடுத்துள்ளது. இம்மரங்களிலிருந்து கிடைக்கும் பதநீர், சீனி செய்வதற்கும் பதநீர் விற்பனைக்கும் பயன்படுத்தப்படும். பனைமரம் ஏறும் துறையில் நல்ல பயிற்சியும் அனுபவமும் உள்ள வல்லுநர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தேவைப்படுகின்றார்கள். மாவட்ட கிராமியக் கைத்தொழில் அதிகாரி அவர்களும், மாவட்ட சம்மேளனமும் தகுதியான நபர்களை தேர்ந்தெடுத்து நவம்பர் மாதம் 10-ந் தேதிக்குள் மாநில சம்மேளனத்திற்கு அனுப்பிவைக்குமாறு கோரப்படுகின்றார்கள். அதற்கான தகுதிகளும் வசதிகளும் கீழே அறிவிக்கப்பட்டுள்ளது.

1. பனைத்தொழில் வல்லுநருக்கும் அவருடைய மனைவிக்கும் சேர்ந்து ரூ. 90 சம்பளமாக அளிக்கப்படும்.
2. பெண்களுக்கு வெல்லம் காய்ச்சும் வேலை மட்டுமே உண்டு.
3. பெண்களுக்கு ஓலையினால் பெட்டி மற்றும் இதர பொருள்கள் செய்வதற்கான பயிற்சி அளிக்கப்படும்.
4. பனைத்தொழில் வல்லுநர்களுக்கு பருவகாலம் வரை வேலை கொடுக்கப்படும்.
5. பருவகாலம் முடிந்த பின்பு தும்பு, ஓலை, நார் ஆகிய வேலை தெரிந்தவர்களுக்கு தொடர்ந்து வேலை கொடுக்கப்படும்.
6. பனைத்தொழில் வல்லுநருக்கும் அவரது மனைவிக்கும் அவர்கள் ஊரில் இருந்து வேலைக்கு வந்து சேருவதற்கும், வேலை முடிந்தபின் ஊர் திரும்பிப் போகவும் ரயில் கட்டணம் அளிக்கப்படும்.
7. தேர்ந்தெடுக்கப்பட்ட வல்லுநருக்கும் அவருடைய மனைவிக்கும் மாவட்ட சம்மேளனங்கள் மூன்றாம் வகுப்பு இரயில் கட்டணமும் தினப்படி, நபர் ஒன்றுக்கு ரூபாய் இரண்டு கொடுத்து அனுப்பிவைக்கவேண்டும். இத்தொகை மாநில சம்மேளனத்திடமிருந்து மாவட்ட சம்மேளனங்கள் பிறகு பெற்றுக்கொள்ளலாம். தொழில் வல்லுநர்கள் திரும்பிச் செல்வதற்கான பயணத் தொகை மாநில சம்மேளனம் அளிக்கும்.
8. மாவட்ட சம்மேளனம் இல்லாத மாவட்டங்களிலிருந்து வர விரும்பும் பனைத் தொழில் வல்லுநர்களுக்கு சென்னை வர ஏற்படும் செலவை மாநில சம்மேளனம் அந்த மாவட்ட கிராமியக் கைத்தொழில் அதிகாரிக்கு அனுப்பிவைக்கும்.
9. பனைத்தொழில் வல்லுநர்கள் தங்களிடமுள்ள பதநீர் இறக்கும் கருவிகளுடன் வரவேண்டும்.
10. அதிகமான பதநீர் இறக்கிக் கொடுக்கும் வல்லுநருக்கு ரொக்கப் பரிசும், அவரை அனுப்பிய மாவட்டத்திற்கு சிறப்புப் பரிசும் கொடுக்கப்படும்.
11. பண்டபாளை சீவுவதில் அனுபவமும், திறமையுமுள்ள ஆறு வல்லுநர்கள் தேவை.
12. மதுவிலக்குக் குற்றத்தில் சம்பந்தப்பட்டவரையோ, லைசென்சை துர்விநியோகம் செய்பவரையோ, சங்கத்தில் உறுப்பினர் அல்லாதவரையோ அனுப்பக்கூடாது.
13. பனைத்தொழில் வல்லுநர்கள் வரும்போது அவர்கள் எந்தச் சங்கத்தில் உறுப்பினராக இருந்தார்களோ அந்த சங்க உறுப்பினர் எண், பழைய லைசென்ஸ் ஆகியவற்றை கொண்டு வரவேண்டும்.

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம் — பெருந்தகை யான்கண் படின்

14. தங்குவதற்கு இலவச ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

15. பனைத்தொழில் வல்லுநர்கள் அனைவரும் டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் சென்னையிலுள்ள மாதவரம் பனைப் பண்ணைக்கு வந்து சேரவேண்டும்.

மாவட்டம்	தொழில் வல்லுநர்களின் எண்ணிக்கை	மாவட்டம்	தொழில் வல்லுநர்களின் எண்ணிக்கை
1. கன்னியாகுமரி ...	6	9. செங்கற்பட்டு ...	10
2. திருநெல்வேலி ...	10+2	10. வட ஆற்காடு ...	4
3. இராமநாதபுரம் ...	8	11. சேலம் ...	10+1 (பண்டபாளை
4. மதுரை ...	4	12. கோயம்புத்தூர் ...	10+2 சீவத் தெரிந்தவர்கள்)
5. திருச்சிராப்பள்ளி ...	6		
6. தஞ்சாவூர் ...	2	13. சென்னை: கந்தமாநகர் சங்கம் ...	2
7. தென்னாற்காடு ...	10		
8. தென்னாற்காடு ...	6 (100 மரம் ஏறப் பழகியவர்கள்)	14. மாதவரம் சங்கம் ...	3
		15. நல்லாங்குப்பம் சங்கம்	4

குறிப்பு :—பனைத்தொழில் வல்லுநர்கள் அனைவரும் கட்டுப்பாளையும், அலகும் இடுக்கத் தெரிந்தவராக இருத்தல் மிகவும் சிறந்தது.

(ஒப்பம்) கே. சம்பந்தம்,
காரியதரிசி,

உலக நன்மைக்கு காந்திஜியின் பணி

உலகுக்கு மகாத்மா காந்தி ஆற்றியுள்ள பணி, கடந்த 100, 200 ஆண்டுகளில் வேறு யாரும் ஆற்றியுள்ள பணிக்கு முற்றிலும் இணையாகும் அல்லது அதிகமாகும் என்று அமெரிக்கத் தூதர் செஸ்ட்டர் போல்ஸ் ஜாதவ்ப்பூர் பல்கலைக் கழகத்தில் பேசுகையில் கூறினர். நீக்ரோ மக்களின் விடுதலைப் போராட்டத்தில் காந்திஜி பெற்றுள்ள செல்வாக்குப் பற்றி தூதர் சுட்டிக் காட்டுகையில் சொன்னதாவது :—

சமீபத்தில் வாஷிங்டனில் நடைபெற்ற அணிவகுப்பு பற்றிக் குறிப்பிட்டு நீக்ரோக்களும், வெள்ளையர்களுமாக 2 லட்சம் பேர் அதில் கலந்துகொண்டு, இணையாகவும், கண்யமாகவும் ஊர்வலம் வந்தனர் என்றார். "இதுபோன்ற கிளர்ச்சிகள், உங்கள் கோட்பாடுகள் என் நாட்டில் வேரூன்றி வருவதற்குப் பெரும் சான்றுகளாகும். நீக்ரோக்கள் இன்று முழு விழிப்புடன் இருக்கின்றனர்; அவர்களது வேண்டுகோள்கள் அமெரிக்கரின் மனச்சாட்சியில் உறைத்து பலன் கிடைக்கும்" என்று போல்ஸ் நம்பிக்கை தெரிவித்தார்.

ஆத்ம சக்தி

சக்தி (ஆற்றல்) என்பதற்கு காந்திஜி அளித்துள்ள விளக்கம் பற்றி அவர் குறிப்பிடுகையில், "அமெரிக்கர்களும், இந்தியர்களும் ஒருவர் மற்றொருவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை எவ்வளவோ உண்டு. ஆத்ம சக்தி ஆற்றலின் பொருள் குறித்து நீங்களே எங்களுக்கு முதன் முதலாகக் கற்றுக் கொடுத்திருக்கிறீர்கள்" என்றார்.

புது பூச்சிக் கொல்லி மருந்து

வெட்டுக்கிளிகளால் பயிர்களுக்கு சேதம் இனி ஏற்படாது!

பயிர்களை வெட்டுக்கிளிகளிடமிருந்தும் இதர புழு, பூச்சிக்களிடமிருந்தும் பாதுகாக்க ஒரு சிறந்த ரசாயன மருந்தை மேற்கு ஜெர்மன் நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர். இதனால் மனிதர்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது. அத்துடன் மட்டுமின்றி உருளைக்கிழங்கு போன்றவைகளுக்கும் வரக்கூடிய நோய்களும் இதன்மூலம் தடுக்கப்படுகின்றன. பயிர்களைப் பாதுகாப்பதற்கு இதைவிட சிறந்த மருந்து வேறெதுவும் இல்லை.

தானியங்களைப் புழு, பூச்சி இவைகளிடமிருந்துக் காப்பாற்றுவதற்காக உபயோகிக்கப்படும் ரசாயனப் பொருள்கள், மருந்துகள் மூலம் உணவுப் பொருள்களே கூட உபயோகிக்க லாயக்கில்லாதபடி போய் விடுகின்றன.

சமீபத்தில் மேற்கு ஜெர்மன் ஆராய்ச்சிக் கோஷ்டியினர் தங்கள் ஆராய்ச்சிகள் மூலம் தாவரங்களைப் புழு பூச்சிகளிலிருந்துக் காப்பாற்றும் ஒருவித மருந்தைக் கண்டு பிடித்திருக்கின்றனர். இம்மருந்து செடிகளுள் பிரவேசித்து எல்லா புழு பூச்சிகளையும் கொன்று விடுகிறது. அத்துடன் இதனால் மனிதர்களுக்கு எவ்வித தீங்கும் ஏற்படுவதில்லை. இந்த பிரபலமான ரசாயனப் பொருளின் பெயர் ஈ. 605. இந்தப் பொருளை தெளித்தபின் இது பாஸ்பாரிக் அமிலமாகி மாறி விடுகிறது. இது மனிதர்களுக்கு ஆபத்து விளைவிக்காத தன்மையுடையது. ஆகவே நவதானியங்கள், காய்கறிகள், பழங்கள் எல்லாவற்றின் மீதும் இதை தெளிக்கலாம்.

இந்தப் பொருளை ஆசியா, ஆப்பிரிக்காவிலுள்ள பரந்த வயல்களில் உபயோகிக்க மேற்கு ஜெர்மன் நிபுணர்கள் தீர்மானித்துள்ளனர். வெட்டுக்கிளியால் சேதமாகும் பயிர்கள் இனி இப்புது முறையால் காப்பாற்றப்படும்.

கரும்புக்கு வரும் நோய்கள், உருளைக் கிழங்குக்கு வரும் நோய்கள் இவைகள் ஏற்படாவண்ணம் இப்புது மருந்து தடுக்கக் கூடியது.

பல ரசாயனப் பொருள்கள் உபயோகித்ததில் சில பட்சிகளும் உயிரிழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இப்புது மருந்து பூச்சிகளை மட்டுமே கொல்லக் கூடியது. இதனால் பட்சிகளுக்கோ, இதரப் பிராணிகளுக்கோ உயிர் ஆபத்து எதுவும் ஏற்படாது.

இம்மருந்தை விதையில் தெளித்து நட்டாலே போதும். பெருகிவரும் உலக ஜனத்தொகைக்கு உணவுப் பொருள் அதிகமாகக் கிடைக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்கு ஜெர்மன் நிபுணர்கள் கண்டு பிடித்துள்ள இப்புது மருந்து தானியங்களையும், காய்களையும், பழங்களையும் புழு பூச்சிகளிடமிருந்து காப்பாற்றுவதினால் மனித குலத்திற்கு பெரிய வரப்பிரசாதம் போன்றதாகும்.

சென்னை மாநிலத்திலுள்ள பனை மரங்கள்

	மாவட்டங்கள்		மரங்களின் எண்ணிக்கை (தோராயமாக)
1.	கன்னியாகுமரி	...	15,00,000
2.	திருநெல்வேலி	...	2,00,00,000
3.	இராமநாதபுரம்	...	30,00,000
4.	மதுரை	...	1,00,000
5.	திருச்சிராப்பள்ளி	...	1,00,000
6.	தஞ்சாவூர்	...	2,00,000
7.	தென் ஆற்காடு	...	1,00,000
8.	செங்கல்பட்டு	...	50,000
9.	வட ஆற்காடு	...	50,000
10.	சேலம்	...	69,00,000
11.	கோயம்புத்தூர்	...	80,00,000
	மொத்தம்	...	4,00,00,000

தேசீயப் பனைவெல்ல தினம்

நமது தாயகம் விடுதலைபெற்ற பின், எண்ணுவாரற்றிருந்த பனைத் தொழிலிலும், பனைவெல்ல உற்பத்தியாளரின் வாழ்க்கை நிலையிலும் ஏற்றம் காண எண்ணிய அரசாங்கம் 23—12—1947-ல் பனைவெல்லத் தொழில் அபிவிருத்தி வேலையை நாடெங்கும் துவக்கியது. இந்தப் பொன்னுன நன்னுளில் நலமிகு அரசாங்கம் எடுத்துக்கொண்ட பரிபூரண அபிவிருத்தி- வேலைகளையும், முயற்சிகளையும் ஒவ்வொரு ஆண்டும் நினைவுபடுத்திக் கொள்ளும் பொருட்டு இவ்வாண்டிலும் 23—12—'63-ல் தேசீயப் பனைவெல்ல தினத்தைச் சீரிய முறையில் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேம்.

பனைவெல்ல உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும் மதுவிலக்கின் மேன்மையை உணர்ந்து, அதன் வெற்றிக்குப்பாடுபடவும், எதிர்கால மக்களின் நல்வாழ்வு கருதி ஏராளமான பனங்கொட்டைகளை நடவும் வேண்டும். உறுதி தளராத உள்ளத்தோடு நாட்டின் வளத்தைப் பெருக்குவதில் ஆர்வமும், அக்கறையும் கொண்டவர்களாய்த் திகழ வேண்டுமென இந்நாளில் உறுதிபூண்டு, ஒன்றுபட்டு உயர்வடையவேண்டும்.

எல்லா ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்டச் சம்மேளனங்களும் 23—12—'63-ல் இப்பெரு விழாவைச் சிறப்பாகக் கொணடாடி, மாநில சம்மேளனத்திற்குத் தெரிவித்தால் நமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். எனவே ஒவ்வொரு ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கமும் கொண்டாடுவதற்கான நிகழ்ச்சி நிரல், தேசீயப் பனைவெல்லத் தொழிலாளர் பதிவேடு ஆகியவற்றின் மாதிரியும் இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சி நிரல்

23—12—1963

காலை: 6-30 மணி ... பிரார்த்தனை ஊர்வலம்.

10-00 மணி ... சங்கத் தலைவரால் தேசீயக் கொடி ஏற்றுவித்தல்.

இரண்டு நிமிடங்கள் மௌன பிரார்த்தனை.

கூட்டத்தின் நோக்கத்தைப்பற்றிய சொற்பொழிவு (தலைமையுரை).

உறுதிமொழி (பிரதிக்ஞை).

தேசீயப் பனைவெல்ல உற்பத்தியாளர் பதிவேட்டில் விவரம் எழுதுதல்.

பிரமுகர்களின் சொற்பொழிவுகள்.

விழாத் தலைவரின் முடிவுரை.

பனைவெல்ல விநியோகம்

[குறிப்பு: இத்துடன் பனைப்பொருள் கண்காட்சியும், தொழில் சம்பந்தமாக வேலைகளையும் செய்து காட்ட ஏற்பாடு செய்யலாம்.]

மாலை: ... பனங்கொட்டை நடுதல்.

போட்டி: மரம் ஏறுதல், நவீன அடுப்புக் கட்டுதல், வெல்லம் காய்ச்சுதல்.

உற்பத்தியாளர்களின் கூட்டம்.

இரவு: ... சொக்கப் பனைத் தீ. (Camp fire)

தேசியப் பனைவெல்லத் தொழிலாளர் பதிவேடு

வரிசை எண்	பனைவெல்ல உற்பத்தியாளரின் பெயர்	பதநீர் இறக்குவதில் அனுபவம்	வெல்லம் காய்ச்சுவதில் அனுபவம்	எத்தனை வருட அனுபவம்?	பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத்தில் எத்தனை வருட அனுபவம்?	தொழிலைப்பற்றிய இதர அனுபவங்கள்	கையொப்பம்

[சென்ற ஆண்டிலுள்ள தேசியப் பனைவெல்லத் தொழிலாளர் பதிவேட்டிலேயே தொடர்ந்து எழுதி வரலாம்.]

பனம்பாளை சீவுதல்